தமிழகத்தில் உலகத் தமிழ் மாநாடு

அமைச்சர் ராஜ்மோகன் உறுதி

சென்னை, ஆக. 26: 'தஞ்சையில் நடத்தப்பட்டது போன்று தொன்று தொட்டு நடத்தப்படும் மாநாடாக உலகத் தமிழ் மாநாடு தமிழகத்தில் நடத்தப்படும், இது குறித்து முதல்வர் மூலம் உரிய தகவல் கிடைத்ததும் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும்' என பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனாரின் 143-ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை எழும்பூரில் உள்ள தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் அவரது உருவப்படத்துக்கு புதன்கிழமை மலர் தூவி மரியாதை செலுத்திய பிறகு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் நூல்கள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. திரு.வி.க.வின் வருகைக்குப் பிறகு தான் புலவர் நடை என்பதில் மாற்றம் பெற்று எளிய மக்களுக்கும் புரியும் வகையிலான கருத்துகள், கட்டுரைகள் நிறைந்த தமிழ் நடை உருவானது. ஒரு புதிய நடையை தோற்றுவித்த புரட்சியாளர் திரு.வி.க. அவரது நினைவைப் போற்றுகிறோம்.

உலகத் தமிழ் மாநாடு நடத்துவது தொடர்பாக முதல்வர் ஜோசப் விஜய்க்கு ஒரு மாபெரும் கனவு இருக்கிறது. உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்களை ஒரு குடையின் கீழ் பார்க்க அவர் விரும்புகிறார். அதனால், அனைத்து தமிழ்ச் சங்கங்களையும் இந்த அரசு அரவணைக்கும். உலகத் தமிழ் மாநாடு என்பது ஒரு பதிப்புரிமையாக பல நாடுகளில் பல சங்கங்களிடம் இருந்தது. அதை முறைப்படி அணுகி வாங்குவதற்கு குறிப்பிட்ட காலம் தேவைப்படுகிறது. இதை இடைப்பட்ட காலங்களில் வேறு பெயர்களில் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில் தமிழகத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதியால் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது. அதேபோன்று பல நாடுகளிலும் மாநாடுகள் நடத்தப்பட்டன. ஆனால் தஞ்சாவூரில் நடத்தப்பட்டது போன்று தொன்று தொட்டு நடத்தப்படும் மாநாடாக உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இருக்கும். இதுதொடர்பாக உயர் நிலைக் குழு மூலம் பல்வேறு நாடுகளில் உள்ள அமைப்புகளிடம் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

'தமிழ்த் தென்றல்' திரு.வி.கலியாணசுந்தரனாரின் 143-ஆவது பிறந்த நாளையொட்டி, சென்னை எழும்பூர், தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் அவரது உருவப் படத்துக்கு புதன்கிழமை மலர் தூவி மரியாதை செலுத்திய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலர் வே.ராஜாராமன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள் உள்ளிட்டோர்.

தமிழ் மொழியின் சிறப்பு என்பது அதன் தொன்மையில் மட்டுமல்ல; அதன் தொடர்ச்சியிலும் இருக்கிறது. அயலகத் தமிழர்களுக்கான ஆண்டுதோறும் ஜனவரியில் நடத்தப்படும் இரு நாள் நிகழ்வுகளை மேலும் சில நாள்கள் நடத்தவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. உலகத் தமிழ் மாநாடு குறித்து ஆலோசிப்பதற்கான உயர்நிலைக் குழு குறித்து முதல்வர் மூலம் உரிய தகவல் கிடைத்ததும் அரசு சார்பில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும். தொடர்ந்து உறுதியாக தமிழகத்திலும் உலகத் தமிழ் மாநாடு நடத்தப்படும் என்றார் அவர்.

அப்போது தமிழ் வளர்ச்சி செய்தித் துறைச் செயலர் ராஜாராமன், இயக்குநர் ஔவை ந.அருள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

செப்.1-இல் பாசனத்துக்கு மேட்டூர் அணையை திறந்து வைக்கிறார் முதல்வர் விஜய்

சென்னை, ஆக. 26: டெல்டா பாசனத்துக்காக, வரும் செப். 1-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை முதல்வர் ச.ஜோசப் விஜய் திறந்துவிடவுள்ளார்.

இதுகுறித்து தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என்.ஆனந்த் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிகழ் பாசன ஆண்டின் தொடக்கத்தில் சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் 41.223 டி.எம்.சி. மட்டுமே நீர் இருப்பு இருந்தது. கர்நாடக அணைகளிலிருந்து கிடைக்க வேண்டிய நீர் போதிய அளவில் கிடைக்காததாலும், அணையின் குறைந்தபட்ச இருப்பான 10 டி.எம்.சி.யை பராமரிக்க வேண்டியிருந்ததாலும், டெல்டா பாசனத்துக்கு தொடர்ச்சியாக நீர் வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. இருப்பினும், பொதுமக்களின் அத்தியாவசிய குடிநீர்த் தேவைகளுக்காக மேட்டூர் அணையிலிருந்து தேவையான அளவு நீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்துக்கு உரிய காவிரி நீரைப் பெறுவதற்காக, தமிழக அரசு சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக, வெவ்வேறு காலகட்டங்களில் தமிழகத்தின் எல்லையான பில்லிகுண்டுலுவில் விநாடிக்கு 3,500 கனஅடி, 9,000 கனஅடி மற்றும் 12,000 கனஅடி நீர் கிடைப்பதை உறுதி செய்யுமாறு கர்நாடக அரசுக்கு காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டது. இதன்மூலம் தமிழகத்துக்கு உரிய காவிரி நீரைப் பெறுவதற்கான உரிமை தொடர்ந்து நிலைநாட்டப்பட்டுள்ளது.

செப்.1-இல் திறப்பு: மேட்டூர் அணையின் நீர் இருப்பு படிப்படியாக உயர்ந்து வருவதையும், எதிர்பார்க்கப்படும் நீர்வரத்து மற்றும் வடகிழக்குப் பருவமழையையும் கருத்தில்கொண்டு, குடிநீர் மற்றும் டெல்டா பாசனத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வரும் செப்.1 முதல் 45 நாள்களுக்கு, அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொருத்து நீர் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதல்வர் ச.ஜோசப் விஜய் செப். 1-இல் மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்காக நீரைத் திறந்துவிடவுள்ளார். இதையடுத்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, காவிரி டெல்டா மாவட்டங்களில் பாசனப் பணிகளை உடனடியாகத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி, நிலங்களைத் தயார் செய்தல், நாற்றங்கால் அமைத்தல், விதைகள், உரங்கள் உள்ளிட்டவற்றை போதிய அளவில் இருப்பில் வைத்தல் ஆகியவற்றை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

குறுகிய கால மற்றும் நடுத்தர கால நெல் ரகங்கள் உள்ளிட்ட பொருத்தமான பயிர் ரகங்களைத் தேர்வு செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும். விவசாயிகள், கிடைக்கும் நீரை சிக்கனமாகவும் திட்டமிட்டும் பயன்படுத்தி, வேளாண் துறையின் ஆலோசனையுடன் சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், முறைப்பாசனத்தின் மூலம் கடைமடை வரை நீர் சென்றடைவதையும், அதிகபட்ச பாசனப் பயனை அளிப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பரந்தூர் விவசாயிகளுக்கு நிலம் திருப்பி வழங்கப்படுமா?

பரந்தூர் விவசாயிகளுக்கு நிலம் திருப்பித் தருவது தொடர்பாக சட்டவல்லுநர்களிடம் கலந்தாலோசிக்கப்படும் என்று அமைச்சர் ராஜ்மோகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்துக்கு விவசாயமும் வேண்டும், விமான நிலையமும் வேண்டும். பரந்தூர் விமான நிலையத்துக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான தொகைகளை ஒரு சில விவசாயிகளுக்கு கொடுத்துள்ளனர்.

அதேவேளையில் சிலருக்கு கொடுக்கவில்லை. ஒரு நிலையான வளர்ச்சி வேண்டும். அதற்கான இந்தப் பயணத்தில் சொன்னதை செய்தார் முதல்வர் விஜய். சுமார் ஆயிரம் ஆண்டுகள் தாண்டிய தொல்லியல் பொக்கிஷம் கம்பன் கால்வாய் அங்குதான் இருக்கிறது. அங்கிருந்துதான் கடைமடை ஏரிகளுக்கு தண்ணீர் வரும். அப்படி வந்தால்தான் பல்லாயிரக்கணக்கான பறவைகள் வந்து இனப்பெருக்கம் செய்யும். இது ஒரு தொல்லியல் மட்டுமல்லாது, சுற்றுச்சூழல் சங்கிலி. அதுமட்டுமல்லாமல், 1,000 நாள்களைக் கடந்து மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

பரந்தூரில் விவசாயிகளிடம் கையகப்படுத்தப்பட்ட நிலம் திருப்பித் தரப்படுமா என்பது குறித்து சட்ட வல்லுநர்களிடம் கலந்தாலோசித்துதான் கூற முடியும். விவசாயிகளுக்கு சாதகமாகவே அரசின் செயல்பாடுகள் இருக்கும். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது.

எனவே, அனைத்து தரப்பினரிடமும் கலந்து ஆலோசித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என்றார் அவர்.

மலைகள் பாதுகாப்புக்கு கடுமையான சட்டம் நிறைவேற்றப்படும்

கோவை, ஆக. 26: தமிழகத்தில் மலைகள் காணாமல் போன விவகாரத்தில் விரைவில் கடுமையான சட்டம் நிறைவேற்றப்படும் என்றும், இதுதொடர்பான நடவடிக்கைகளைக் கண்டு எதிர்க்கட்சிகளுக்குப் பயம் வந்துவிட்டதாகவும் வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

இது குறித்து கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் புதன்கிழமை கூறியதாவது:

சட்டப்பேரவையில் இயற்கை வளங்கள் (கனிம வளங்கள்) துறை அமைச்சர் டி.கே.பிரபு 'மலைகளைக் காணவில்லை' என்று தெரிவித்திருந்தது குறித்து கேட்கிறீர்கள். அதற்காக கடுமையான சட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

18 மலைகள் காணாமல் போனது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இவற்றில் பினாமியாக யார் யார் செயல்பட்டுள்ளார்கள் என்பது குறித்தும் ஆய்வு நடைபெற்று வருகிறது. தமிழகத்திலிருந்து கேரள மாநிலத்துக்கு ஜல்லி, மணல் உள்ளிட்ட கனிம வளங்கள் கொண்டு செல்லப்படுவதை அரசு தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது. இதற்காக கடந்த 20 நாள்களுக்கு முன்பாகவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழக உறுப்பினர்களை விலைக்கு வாங்கிவிட முடியாதா என்று சட்டப்பேரவையில் எடப்பாடி கே.பழனிசாமி பேசினார். அவரது நிலையும், எண்ணமும் வேறுபட்டவை. அதனால்தான் பலரும் அதிமுகவிலிருந்து வெளியே வந்தனர். திமுகவுடன் இணைந்து ஆட்சி அமைக்கலாம் என்று நினைத்தபோதுதான் எடப்பாடி பழனிசாமிக்கு இந்த நிலைமை ஏற்பட்டது.

சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் பேசிய பிறகு அவைக் குறிப்பில் இருந்து சில பகுதிகள் நீக்கப்படுவது வழக்கமான மரபுதான். அவைக் குறிப்பில் நீக்கப்பட்ட வார்த்தைகள் சமூக வலைதளங்களில் பரவி வருவது தொடர்பாக செய்தித் துறை அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். இதுபோன்ற விஷயங்கள் மக்களிடம் விளம்பரமாகும் வகையில் செய்யப்படுவதால் செய்தித் துறையுடன் கலந்து ஆலோசித்து தகுந்த முடிவுகள் எடுக்கப்படும் என்றார்.

தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணைய உறுப்பினர்கள் நியமனம்

நீதிபதி ஆர்.என்.மஞ்சுளா

சென்னை, ஆக. 26: தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்களாக இருவரை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டது.

சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்களாக சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.என்.மஞ்சுளா, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஏ.சுகந்தி ஆகியோரை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இவர்கள் இருவரும் 3 ஆண்டுகள் வரை பணியாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிணறு தூர்வாரியபோது விஷ வாயு தாக்கி தந்தை, மகன் உயிரிழப்பு

ரவி

அய்யனார்

சென்னை, ஆக. 26: சென்னை யானைக்கவுனியில் கிணறு தூர்வாரியபோது விஷவாயு தாக்கியதில் தந்தை, மகன் உயிரிழந்தனர்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே உள்ள மழவந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்தவர் ஏ.ரவி (65). இவரின் மகன் அய்யனார் (35). இருவரும், சென்னை கொடுங்கையூர் சின்னமடம் பகுதியில் குடும்பத்துடன் தங்கி, கடந்த 15 ஆண்டுகளாக கிணறு தூர்வாரும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இருவரும் சௌகார்பேட்டை பொன்னப்பன் தெருவில் உள்ள ஒருவீட்டின் பின்புறம் இருந்த சுமார் மூன்றரை அடி அகலமும், 45 அடி ஆழமும் கொண்ட கிணற்றை தூர்வார புதன்கிழமை சென்றனர். தூர்வாருவதற்காக அய்யனார் கிணற்றுக்குள் இறங்கினார்.

நீண்ட நேரமாகியும் அவர் வெளியே வராததால் ரவி கிணற்றுக்குள் இறங்கினார். அவரும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த வீட்டின் உரிமையாளர் உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில், உயர்நீதிமன்ற தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து சென்று, பாதுகாப்பு உபகரணங்களுடன் கிணற்றுக்குள் இறங்கினர்.

அப்போது கிணற்றுக்குள் விஷவாயு தாக்கியதில் ரவி, அய்யனார் ஆகிய இருவரும் உயிரிழந்து கிடந்தது தெரிய வந்தது. உடனே இருவரின் சடலங்களையும் தீயணைப்புப் படையினர் மீட்டு, வெளியே கொண்டு வந்தனர். தகவலறிந்த யானைக்கவுனி போலீஸார் அங்கு விரைந்து வந்து, இருவர் சடலங்களையும் கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுதொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து நடத்திய முதல் கட்ட விசாரணையில், நீண்ட நாள்களாக பராமரிப்பு இல்லாமல் இருந்ததால் கிணற்றில் ஏற்கெனவே விஷ வாயு தேங்கியிருந்ததும், அதை அறியாமல் இருவரும் கிணற்றுக்குள் இறங்கியதால் விஷவாயு தாக்கி இறந்திருப்பதும் தெரியவந்தது. இதுதொடர்பாக வீட்டு உரிமையாளர் மற்றும் ரவி, அய்யனார் ஆகியோரை வேலைக்கு அழைத்து வந்த ஒப்பந்ததாரர் ஆகியோரிடம் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

கார்-வேன் மோதல்: இருவர் உயிரிழப்பு

சங்கரன்கோவில், ஆக. 26: தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே கார்- வேன் மோதி விபத்துக்குள்ளானதில், இருவர் உயிரிழந்தனர்.

ராமேசுவரம் பகுதியைச் சேர்ந்த சிலர் குற்றாலத்துக்கு காரில் சென்றனர். இதேபோல் தேனி பகுதியைச் சேர்ந்தவர்கள் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலை அடுத்த மலையான்குளம் அருகேயுள்ள கோயிலில் தரிசனம் செய்வதற்காக வேனில் சென்றனர்.

சங்கரன்கோவில் பொதிகைநகர் அருகே புதன்கிழமை காலையில்சென்றபோது, காரும், வேனும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், கார் ஓட்டுநர் இளையராஜா(34), காரில் பயணித்த ராமேசுவரம் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் நம்புகுமார் (எ) மருது (30) ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் கார், வேனில் பயணம் செய்த ராமேசுவரம் 17 பேர் காயமடைந்தனர்.

என்ஐஏ தொடர்ந்த வழக்கு

பிரிட்டனைச் சேர்ந்த நபரை விடுவிக்க உயர்நீதிமன்றம் மறுப்பு

சென்னை, ஆக. 26: பயங்கரவாத அமைப்புக்கு நிதி திரட்டியதாக தேசிய புலனாய்வு முகமை தொடர்ந்த வழக்கிலிருந்து பிரிட்டனைச் சேர்ந்த நபரை விடுவிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

கடந்த 2004 முதல் 2009-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், ஹிஸ்ப் உத் தஹ்ரிர் என்ற பயங்கரவாத அமைப்புக்கு நிதி திரட்டியதாகவும், சென்னையில் ஆள்கள் சேர்த்ததாகவும், பிரிட்டனைச் சேர்ந்த அஸில் அஹமது என்பவரை தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ), கடந்த 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைது செய்தது. இந்த வழக்கு பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

இந்த வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி அஸில் அஹமது தாக்கல் செய்த மனுவை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த உத்தரவை எதிர்த்து அஸில் அஹமது தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் அனிதா சுமந்த் மற்றும் சுந்தர்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. இதனை விசாரித்த நீதிபதிகள், பயங்கரவாத அமைப்புக்கு நிதி திரட்டியது, அந்த அமைப்பின் கொள்கைகள் குறித்து வகுப்பு எடுத்து ஆள்களைச் சேர்த்தது, நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயல். எனவே, மனுதாரரை விடுவிக்க முடியாது எனக் கூறி மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

தமிழ்நாடு அரசு
இயக்ககம், பட்டு வளர்ச்சித்துறை
அண்ணாநகர், சேலம் - 636 007.
தொலைபேசி: 0427-2312464, தொலை நகல்:0427-2312464 மின்னஞ்சல்: tnsericulture@gmail.com
மின்னணு ஒப்பந்த விலைப்புள்ளி எண். TN/SERI/01/2026/645, நாள்: 25.08.2026
வரிசை எண்.1 உள்ள பொருள் கொள்முதல் செய்வதற்கு தகுதியுள்ள அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மற்றும் வரிசை எண்.2ல் உள்ள பொருட்கள் விற்பனை செய்யும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

பொருட்களின் விபரம்

வ. எண்	பொருட்களின் விபரம்	அளவு (தோராயமாக)	ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித் தொகை (E.M.D) ரூ.
1	Polymer Mountages (Yellow)	2,09,619 Nos	2,09,000
2	Tender cum auction for Sale of Cocoon and Silk bye products (PC — White (Good) 6148.480 kgs, PC — White (Dull) -190 kgs, Market Cut Cocoon — 92.182 kgs, Silk waste (Good) -716.100 kgs, Silk Waste (Dull) -998 kgs, Degummed waste (Good) -793 kgs, Degummed waste (Dull) -2772.100 kgs, Double cocoon (Good) — 381.300 kgs, Thrower waste (Good) — 63.550 kgs, Thrower Waste (Dull) — 45.700 kgs Flimsy Cocoon (Good) — 229.500 kgs and Flimsy Cocoon (Dull) — 145 kgs) * Itemwise EMD may be furnished as per Tender documents	11574.832 kgs	1,16,100

மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் "https://tntenders.gov.in" என்ற இணையத்தளத்தில் 15.09.2026 அன்று காலை 11.00 மணி வரை இணையவழி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 15.09.2026 அன்று காலை 11.00 மணி வரை பதிவேற்றம் செய்யலாம். மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் நண்பகல் 12.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் உரிமையாளர் குழுவால் திறக்கப்படும்.
* டேவணித்தொகை NEFT/RTGS முறைப் மட்டுமே இணையதள பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டு வேண்டும்.
செ.உ.தொ.இ.2661/ஒப்பந்தப்புள்ளி/2026 ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்/ இணை இயக்குநர் (மு.கூ.பொ)

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
TNSC Bank
நெ.4, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, சென்னை -600 001.
தொலைபேசி:2530 2330; மின்னஞ்சல்:hrd@tnsc.bank.in
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கி எண்: 4 (பழைய எண்.273), நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, சென்னை-600001 என்ற முகவரியில் இயங்கும் வங்கிக்கு அலுவலகம் பெற்றுள்ள முகப்புகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்கண்டவாறு இணையவழி ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி ஆவணம் https://tntenders.gov.in என்ற இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பணிகள்	இணையவழியில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் ஆரம்ப நாள்	இணையவழியில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி நாள்	ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் (தொழில்நுட்பம்)	(நுண்ணிகம்)
அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணியாளர்கள், பிளம்பர், தட்டச்சர், எலக்ட்ரீஷியன், பராமரிப்பு பணியாளர்கள், பாதுகாவலர்கள், ஆயுதம் தாங்கிய பாதுகாவலர்கள், சேர் டேக்கர்	27.08.2026 நண்பகல் 12.00 மணி	16.09.2026 பிற்பகல் 05.00 மணி	17.09.2026 பிற்பகல் 03.00 மணி	21.09.2026 பிற்பகல் 03.00 மணி

விருப்பமுள்ள முகவர்கள் தொழில்நுட்பம் மற்றும் நிதித்துறை ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஒப்பந்தப்புள்ளி முன்பணம் ரூ.13,70,000/- ரூபாய் பதின்மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும் இணையவழியில் செலுத்தவேண்டும்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண்:
திருமதி.என்.மஞ்சுளாதேவி, துணை பொதுமேலாளர்,
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட். +91 99625 33637.
செமதொஇ/ 2670 /ஒப்பந்தப்புள்ளி/2026 ஒப்பந்தப்புள்ளி வரவேற்பு அதிகார அலுவலருக்காக

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II
எண். 44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in
அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திரு. ரமேஷ் பாண்டியன், போன் : 8870320425
தொடர்புக்கு : நகர வழக்கு அலுவலர் பெயர்: திரு.S. வெங்கடேசன், உதவி மேலாளர் கைபேசி : 8248740526
அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)
2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.
கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் கீழ்குறிப்பிட்டுள்ள கவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சென்னை பாரத ஸ்டேட் வங்கி, SARB-II கிளைக்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.
கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : (கடன்தாரர்) திருமதி.கலைவாணி பிரகாஷ், க/பெ. திரு. பிரகாஷ், குடியிருப்பு முகவரி: 512, அருணா ஜஸ்கிரீம், முதல் தளம், MTH சாலை, பஜார் தெரு, வரதராஜபுரம், அம்பத்தூர், திருவள்ளூர், சென்னை-600053. அலுவலக முகவரி: திருமதி.கலைவாணி பிரகாஷ் (உரிமையாளர்), க/பெ. திரு. பிரகாஷ், வாணி வேணி மகளிர் விடுதி, 512, MTH சாலை, பஜார் தெரு, வரதராஜபுரம், அம்பத்தூர், திருவள்ளூர், சென்னை-600053. சொத்து முகவரி: பிளாட் எண்.FF-D, முதல் தளம், மனை எண்.86, 21வது தெரு, கிருஷ்ணா நகர் பகுதி II, வரதராஜபுரம், முடிச்சூர், சென்னை-600048.
நிலுவைத் தொகை: 24/08/2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ.87,76,154/- (ரூபாய் எண்பத்து ஏழு இலட்சத்து எழுபத்து ஆறு ஆயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
சொத்தின் அட்டவணை : A முதன்மை: அட்டவணை- A (மொத்த சொத்து): தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் படப்பை சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், எண்.111, வரதராஜபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண் 105/3A & 105/3B, இல் அடங்கிய "கிருஷ்ணா நகர் பகுதி-II", மனை எண்.86 இல் உள்ள 2400ச.அடி விஸ்தீரணமுள்ள காலி வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து தண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில் : மனை எண்.78; தெற்கில் : 20அடி சாலை; கிழக்கில் : மனை எண்.85; மேற்கில் : மனை எண்.87; நூற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வடக்கு புறம் : 40அடி; கிழக்கு மேற்காக தென் புறம் : 40அடி. வடக்கு தெற்காக கிழக்கு புறம் : 60அடி; வடக்கு தெற்காக மேற்கு புறம் : 60அடி; அட்டவணை 'B' விற்பனைச் சொத்து: விற்பனை ஒப்பந்த ஆவண எண்.18/2020 இன்படி மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை 'A' இல் அட்டவணை 'B' இன் நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 435சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனுடன் மூடிய கார் நிறுத்தும் இடம், பொதுப்பரப்பு பொதுவசதிகள் உட்பட, வளாகத்தில் முதல் தளத்தில் பரப்பளவு 1295சதுர அடி RCC மேற்தளங்கொண்ட சிப்ளாட் எண்.FF-D. Asset Id : SBIN39027591517
குறைந்தபட்ச கேட்பு விலை/ ₹ 32,00,000/- | டேவணித்தொகை/ ₹ 3,20,000/- | ஏல உயர்வுத் தொகை/ ₹ 25,000/- | சுவாதீனம்/ மெய்நிலை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் : 18.09.2026,- நேரம்: காலை 10.00 முதல் மாலை 4.00 வரை
மின் ஏலத் தேதி & நேரம்: 29.09.2026 | நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை | (தவா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).
வங்கிக்குத் தெரிந்தவரை